# PAPER-III
# TAMIL

**Signature and Name of Invigilator**

1. (Signature) ____________________________
   (Name) ____________________________
2. (Signature) ____________________________
   (Name) ____________________________

OMR Sheet No. : .............................................
(To be filled by the Candidate)

Roll No. | | | | | | | | |
(In figures as per admission card)

Roll No.________________________________
(In words)

**J 2 6 1 4**

Time : **2 ½** hours] [Maximum Marks : **150**

Number of Pages in this Booklet : **16** Number of Questions in this Booklet : **75**

## Instructions for the Candidates

1. Write your roll number in the space provided on the top of this page.
2. This paper consists of seventy five multiple-choice type of questions.
3. At the commencement of examination, the question booklet will be given to you. In the first 5 minutes, you are requested to open the booklet and compulsorily examine it as below :
   (i) To have access to the Question Booklet, tear off the paper seal on the edge of this cover page. Do not accept a booklet without sticker-seal and do not accept an open booklet.
   (ii) **Tally the number of pages and number of questions in the booklet with the information printed on the cover page. Faulty booklets due to pages/questions missing or duplicate or not in serial order or any other discrepancy should be got replaced immediately by a correct booklet from the invigilator within the period of 5 minutes. Afterwards, neither the Question Booklet will be replaced nor any extra time will be given.**
   (iii) After this verification is over, the OMR Sheet Number should be entered on this Test Booklet.
4. Each item has four alternative responses marked (A), (B), (C) and (D). You have to darken the circle as indicated below on the correct response against each item.
   **Example :** Ⓐ Ⓑ ● Ⓓ
   where (C) is the correct response.
5. Your responses to the items are to be indicated in the **OMR Sheet given inside the Booklet only.** If you mark at any place other than in the circle in the OMR Sheet, it will not be evaluated.
6. Read instructions given inside carefully.
7. Rough Work is to be done in the end of this booklet.
8. If you write your Name, Roll Number, Phone Number or put any mark on any part of the OMR Sheet, except for the space allotted for the relevant entries, which may disclose your identity, or use abusive language or employ any other unfair means such as change of response by scratching or using white fluid, you will render yourself liable to disqualification.
9. You have to return the test question booklet and Original OMR Sheet to the invigilators at the end of the examination compulsorily and must not carry it with you outside the Examination Hall. You are, however, allowed to carry original question booklet and duplicate copy of OMR Sheet on conclusion of examination.
10. **Use only Blue/Black Ball point pen.**
11. **Use of any calculator or log table etc., is prohibited.**
12. **There is no negative marks for incorrect answers.**

## परीक्षार्थियों के लिए निर्देश

1. इस पृष्ठ के ऊपर नियत स्थान पर अपना रोल नम्बर लिखिए ।
2. इस प्रश्न-पत्र में पचहत्तर बहुविकल्पीय प्रश्न हैं ।
3. परीक्षा प्रारम्भ होने पर, प्रश्न-पुस्तिका आपको दे दी जायेगी । पहले पाँच मिनट आपको प्रश्न-पुस्तिका खोलने तथा उसकी निम्नलिखित जाँच के लिए दिये जायेंगे, जिसकी जाँच आपको अवश्य करनी है :
   (i) प्रश्न-पुस्तिका खोलने के लिए उसके कवर पेज पर लगी कागज की सील को फाड़ लें । खुली हुई या बिना स्टीकर-सील की पुस्तिका स्वीकार न करें ।
   (ii) **कवर पृष्ठ पर छपे निर्देशानुसार प्रश्न-पुस्तिका के पृष्ठ तथा प्रश्नों की संख्या को अच्छी तरह चैक कर लें कि ये पूरे हैं । दोषपूर्ण पुस्तिका जिनमें पृष्ठ/प्रश्न कम हों या दुबारा आ गये हों या सीरियल में न हों अर्थात् किसी भी प्रकार की त्रुटिपूर्ण पुस्तिका स्वीकार न करें तथा उसी समय उसे लौटाकर उसके स्थान पर दूसरी सही प्रश्न-पुस्तिका ले लें । इसके लिए आपको पाँच मिनट दिये जायेंगे । उसके बाद न तो आपकी प्रश्न-पुस्तिका वापस ली जायेगी और न ही आपको अतिरिक्त समय दिया जायेगा ।**
   (iii) इस जाँच के बाद OMR पत्रक की क्रम संख्या इस प्रश्न-पुस्तिका पर अंकित कर दें ।
4. प्रत्येक प्रश्न के लिए चार उत्तर विकल्प (A), (B), (C) तथा (D) दिये गये हैं । आपको सही उत्तर के वृत्त को पेन से भरकर काला करना है जैसा कि नीचे दिखाया गया है ।
   **उदाहरण :** Ⓐ Ⓑ ● Ⓓ
   जबकि (C) सही उत्तर है ।
5. प्रश्नों के उत्तर **केवल प्रश्न पुस्तिका के अन्दर दिये गये OMR पत्रक पर ही** अंकित करने हैं । यदि आप OMR पत्रक पर दिये गये वृत्त के अलावा किसी अन्य स्थान पर उत्तर चिह्नांकित करते हैं, तो उसका मूल्यांकन नहीं होगा ।
6. अन्दर दिये गये निर्देशों को ध्यानपूर्वक पढ़ें ।
7. कच्चा काम (Rough Work) इस पुस्तिका के अन्तिम पृष्ठ पर करें ।
8. यदि आप OMR पत्रक पर नियत स्थान के अलावा अपना नाम, रोल नम्बर, फोन नम्बर या कोई भी ऐसा चिह्न जिससे आपकी पहचान हो सके, अंकित करते हैं अथवा अभद्र भाषा का प्रयोग करते हैं, या कोई अन्य अनुचित साधन का प्रयोग करते हैं, जैसे कि अंकित किये गये उत्तर को मिटाना या सफेद स्याही से बदलना तो परीक्षा के लिये अयोग्य घोषित किये जा सकते हैं ।
9. आपको परीक्षा समाप्त होने पर प्रश्न-पुस्तिका एवं मूल OMR पत्रक निरीक्षक महोदय को लौटाना आवश्यक है और परीक्षा समाप्ति के बाद उसे अपने साथ परीक्षा भवन से बाहर न लेकर जायें । हालांकि आप परीक्षा समाप्ति पर मूल प्रश्न-पुस्तिका तथा OMR पत्रक की डुप्लीकेट प्रति अपने साथ ले जा सकते हैं ।
10. **केवल नीले/काले बाल प्वाईंट पेन का ही इस्तेमाल करें ।**
11. **किसी भी प्रकार का संगणक (कैलकुलेटर) या लाग टेबल आदि का प्रयोग वर्जित है ।**
12. **गलत उत्तरों के लिए कोई नकारात्मक अंक नहीं हैं ।**

**TAMIL**
**தமிழ்**
**Paper-III**
**தாள் - III**

**Note :** This paper contains **seventy five (75)** objective type questions of **two (2)** marks each. **All** questions are compulsory.

**குறிப்பு :** இவ்வினாத்தாள் எழுபத்தைந்து (75) விடைதெரி வினாக்களைக் கொண்டது. ஒவ்வொரு வினாவிற்கும் இரண்டு (2) மதிப்பெண்கள் உண்டு. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

**1.** முதல் நா அண்ணம் பொருந்தப் பிறப்பன-
(A) க, ங (B) ச, ஞ
(C) ட, ண (D) த, ப

**2.** மரப்பெயர்க் கிளவிக்குச் சாரியை -
(A) அன் (B) ஆன்
(C) அம் (D) இன்

**3.** பத்துப்பாட்டுள் பாடப்பெற்றோருள் ஒருவன்-
(A) காமவேள் (B) குமரவேள்
(C) திருமால் (D) சிவபெருமான்

**4.** அகநானூற்றைத் தொகுப்பித்தோன்-
(A) பூரிக்கோ
(B) உப்பூரிக்கிழார்
(C) உக்கிரப் பெருவழுதி
(D) யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை

**5.** “எல்லாப் பொருளும் இதன்பால் உள” என்று திருக்குறளின் பெருமையை பேசியவர் -
(A) ஔவையார் (B) தமிழ்நாகனார்
(C) கபிலர் (D) மாங்குடி மருதனார்

**6.** நாலடியாரை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்
(A) எல்லீசு (B) வாஸரஸ்
(C) பெஸ்கி (D) போப்

**7.** குணவாயில் கோட்டம் என்பது
(A) புத்தர் கோயில் (B) அருகன் கோயில்
(C) திருமால் கோயில் (D) சிவன் கோயில்

**8.** சொல்லணிகளுள் ஒன்று -
(A) ஏகபாதம் (B) ஐயவணி
(C) விபரீத அணி (D) உருவகவணி

9. திருக்கோவையாரின் யாப்பு-
(A) அகவற்பா (B) வெண்பா
(C) விருத்தம் (D) கட்டளைக் கலித்துறை

10. 'சொற்கள்' எனும் சொல்லில் இடம் பெற்றுள்ள உருபன்களின் எண்ணிக்கை-
(A) 1 (B) 2 (C) 3 (D) 4

11. பக்திசாரன் என்று அழைக்கப்பட்டவர்
(A) திருப்பாணாழ்வார் (B) மதுரகவியாழ்வார்
(C) திருமழிசையாழ்வார் (D) திருமங்கையாழ்வார்

12. 'நரி விருத்தம்' நூலின் மையப் பொருண்மை-
(A) நிலையாமை (B) துறவு
(C) அன்புடைமை (D) கொல்லாமை

13. தொம்பர் நிகழ்த்தும் கூத்து-
(A) பாவைக்கூத்து (B) கணியான் கூத்து
(C) கழைக்கூத்து (D) தெருக்கூத்து

14. இந்திய அரசாங்கச் செய்திகளைக் கொண்ட அரசிதழ் வெளிவரக் காரணமான அரசன்-
(A) ஷாஜஹான் (B) ஔரங்கசீப்
(C) ஜகாங்கீர் (D) அக்பர்

15. திருவாதிரை நிகழும் திங்கள்-
(A) மார்கழி (B) புரட்டாசி
(C) ஐப்பசி (D) கார்த்திகை

16. தொல்காப்பியர் கூறும் நொடியொடு புணர்ந்த பிசி-
(I) விடுகதை
(II) பெருங்கதையில் குறிப்பு உள்ளது
(III) சிலப்பதிகாரத்தில் குறிப்பு உள்ளது
(IV) புதிர் என்றும் வெடி என்றும் கூறப்படும்
இவற்றுள்
(A) I, II, III சரி (B) அனைத்தும் சரி
(C) அனைத்தும் சரியல்ல (D) I, II, IV சரி

17. குலாம் காதிறு நாவலர்
(I) மகா வித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் தமிழ் பயின்றவர்
(II) பாண்டித் துரைத் தேவருக்கு நண்பர்
(III) புலவராற்றுப்படை இயற்றியவர்
(IV) ஞானமணிமாலை இயற்றியவர்
இவற்றுள்
(A) I, II,III சரி (B) அனைத்தும் சரி
(C) I, III,IV சரி (D) அனைத்தும் சரியல்ல

**18.** ஹென்ரிக் பாதிரியார்
(I) போர்த்துக்கீசியர்
(II) தம்பிரான் வணக்கம் எழுதியவர்
(III) புரோட்டஸ்டண்ட் கிறித்தவர்
(IV) கிரீசித்தியானி வணக்கம் எழுதியவர்
இவற்றுள்
(A) அனைத்தும் சரி (B) அனைத்தும் சரியல்ல
(C) I,II, IV சரி (D) I, III, IV சரி

**19.** இந்திய மொழிக் குடும்பங்கள்
(I) இந்தோ-ஆரிய மொழிக்குடும்பம்
(II) பிரஞ்சு-இந்தோ மொழிக்குடும்பம்
(III) திராவிட மொழிக்குடும்பம்
(IV) ஆசிய-ஆஸ்திரிக் மொழிக்குடும்பம்
இவற்றுள்
(A) அனைத்தும் சரி (B) I, III, IV சரி
(C) அனைத்தும் சரியல்ல (D) I,II, III சரி

**20.** ஒட்டக்கூத்தர் எழுதிய நூற்கள் -
(I) இராஜராஜ சோழன் உலா
(II) தக்கயாகப் பரணி
(III) திருக்கயிலாய ஞானஉலா
(IV) குலோத்துங்கச் சோழனுலா
இவற்றுள்
(A) I,III,IV சரி (B) அனைத்தும் சரி
(C) அனைத்தும் சரியல்ல (D) I,II, IV சரி

**21.** கல்கி என்பவர்
(I) தேசபக்தி நாவல்களை எழுதினார்
(II) இதழ் ஒன்று தொடங்கினார்
(III) இராசராசன் விருது பெற்றார்
(IV) வரலாற்று நாவல்கள் எழுதினார்
இவற்றுள்
(A) I,II,III சரி (B) I, II, IV சரி
(C) I,IV,III சரி (D) அனைத்தும் சரி

**22.** கண்ணகிக்கு
(I) வழித்துணையாக மதுரைக்கு வந்தவள் கவுந்தியடிகள்
(II) அடைக்கலம் தந்தவள் மாதிரி
(III) சிலை எடுத்தவன் கயவாகு மன்னன்
(IV) ஏவல் செய்த தெய்வம் மதுராபுரி
இவற்றுள்
(A) I, II, IV சரி (B) அனைத்தும் சரி
(C) I, II, III சரி (D) அனைத்தும் சரியல்ல

23. குண்டலகேசி
(I) சமண சமயக் காப்பியம்
(II) நீலகேசிக்கு எதிர் நூல்
(III) நாதகுப்தனார் இயற்றியது
(IV) ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று
இவற்றுள்
(A) அனைத்தும் சரி (B) அனைத்தும் சரியல்ல
(C) I, II, III சரி (D) II, III, IV சரி

24. சோழர் காலச் சிற்பக் கலையைக் காட்டும் கோயில்கள்
(I) கங்கை கொண்ட சோழீச்சுரம்
(II) தாராசுரம் ஐராவதேசுவர் கோயில்
(III) காஞ்சி கைலாசநாதர் கோயில்
(IV) திரிபுவனம் திரிபுவனேசுவரர் கோயில்
இவற்றுள்
(A) I, II, III சரி (B) அனைத்தும் சரியல்ல
(C) I, II,IV சரி (D) அனைத்தும் சரி

25. குதிரை நிலை என்பது
(I) குதிரை வீரர்களைப் பாராட்டுவது
(II) போற்றி ஆடும் கூத்து
(III) தும்பைத் திணையில் ஒரு துறை
(IV) சாத்துப்பட்டம் பெறுதல்
இவற்றுள்
(A) I,II,III சரி (B) I, III, IV சரி
(C) அனைத்தும் சரி (D) அனைத்தும் சரியல்ல

26. உறுதிக்கூற்று: (உ) விரிச்சி கேட்டல் சங்ககால வழக்கம்
காரணம்: (கா) முதுமகள் வெறியாட்டு மூலம் குறிகேட்பாள்
(A) (உ) (கா) இரண்டும் சரி (B) (உ) (கா) இரண்டும் சரியல்ல
(C) (உ) சரி (கா) சரியன்று (D) (உ) சரியன்று , (கா) சரி

27. உறுதிக்கூற்று: (உ) வச்சிரநந்தி மதுரையில் திராவிட சங்கம் ஒன்றை நிறுவினார்
காரணம்: (கா) திராவிடமக்கிளிடையே சமய நல்லிணக்கத்தை உருவாக்கும் குறிக்கோள் உடையவர் அவர்
(A) (உ) சரி (கா) சரியன்று (B) (உ) சரியன்று (கா) சரி
(C) இரண்டும் சரி (D) இரண்டும் சரியல்ல

28. உறுதிக்கூற்று: (உ) நெடுநெல்வாடையைப் புறப்பாட்டு என்பார் நச்சினாக்கினியர்
காரணம்: (கா) 'வேம்புதலை யாத்த நோன்காழ் எஃகம்' எனும் தொடர் பாட்டுடைத் தலைவனைச் சுட்டுகிறது
(A) (உ) சரி (கா) சரியன்று (B) (உ) சரியன்று (கா) சரி
(C) (உ) (கா) இரண்டும் சரி (D) இரண்டும் சரியல்ல

29. <u>உறுதிக்கூற்று:</u> *(உ) சுந்தர பாண்டியனுக்கும் தென்னாட்டுப் பௌத்த சங்கத்திற்குமிடையே நட்புறவு இருந்தது*
<u>காரணம்:</u> *(கா) வீரசோழிய உரையாசிரியர் அம்மன்னனுக்குப் புகழ்மாலைகள் சூட்டியுள்ளார்*
(A) *(உ)(கா) இரண்டும் சரியல்ல* (B) *(உ) (கா) இரண்டும் சரி*
(C) *(உ) சரி (கா) சரியன்று* (D) *(உ) சரியன்று , (கா) சரி*

30. <u>உறுதிக்கூற்று:</u> *(உ) சிவன்கோயில்கள் சில, பாடல் பெற்ற தலங்கள் எனப்படுகின்றன*
<u>காரணம்:</u> *(கா) சமய குரவர் நால்வரும் பதிகம் பாடிய கோயில்கள் அவை*
(A) *(உ) சரியன்று (கா) சரி* (B) *இரண்டும் சரி*
(C) *இரண்டும் சரியல்ல* (D) *(உ) சரி , (கா) சரியன்று*

31. <u>உறுதிக்கூற்று:</u> *(உ) சமணர்கள் கொல்லாமைக் கொள்கையைக் கொண்டவர்கள்*
<u>காரணம்:</u> *(கா) கொல்லாமையை உள்ளத்தால் உள்ளுவதும் குற்றம் என்கிறது யசோதர காவியம்*
(A) *(உ) சரி (கா) சரியன்று* (B) *(உ) சரி (கா) சரி*
(C) *இரண்டும் சரியல்ல* (D) *(உ) சரியன்று , (கா) சரி*

32. <u>உறுதிக்கூற்று:</u> *(உ) தென்னிந்தியாவுக்கும் வடஇந்தியாவுக்கும் இடையே கி.மு.3-ஆம் நூற்றாண்டிலேயே மிகப் பெரிய அளவில் வாணிகம் நடைபெற்று வந்தது*
<u>காரணம்:</u> *(கா) தமிழகத்துப் பண்டங்கள் அரபிக்கடல் வழி வடநாட்டுக்குச் சென்றன*
(A) *(உ) (கா) இரண்டும் சரி* (B) *(உ) (கா) இரண்டும் சரியல்ல*
(C) *(உ) சரி (கா) சரியன்று* (D) *(உ) சரியன்று , (கா) சரி*

33. <u>உறுதிக்கூற்று:</u> *(உ) பண்டு வணிகர்கள் கூட்டங்கூட்டமாக-சாத்துகளாகக் கூடிப் பலவிடங்களுக்கும் பண்டங்களை விற்பனைக்காக எடுத்துச் சென்றனர்*
<u>காரணம்:</u> *(கா) ஆறலைக்கும் கள்வர் அந்நாளில் இருந்தனர்*
(A) *(உ) (கா) இரண்டும் சரி* (B) *(உ) (கா) இரண்டும் சரியல்ல*
(C) *(உ) சரி (கா) சரியன்று* (D) *(உ) சரியன்று , (கா) சரி*

34. <u>உறுதிக்கூற்று:</u> *(உ) கி.மு.1200-க்குப் பின்னே வட இந்தியாவில் ஆரிய நாகரிகம் தோன்றியிருக்க வேண்டும்*
<u>காரணம்:</u> *(கா) வேதங்களின் அமைப்பைக் கொண்டும் புதைபொருள் சான்றுகளைக் கொண்டும் கி.மு. 1100-1000 காலப்பகுதியில் அங்கு ஆரிய நாகரிகம் தோன்றியிருக்கலாம் என்பர் அறிஞர் சிலர்*
(A) *(உ) சரி (கா) சரியன்று* (B) *(உ) சரியன்று ; (கா) சரி*
(C) *இரண்டும் சரி* (D) *இரண்டும் சரியல்ல*

35. <u>உறுதிக்கூற்று</u>: (உ) வீதிநாடகங்கள் மக்கள் விழிப்புணர்ச்சிக்காகப் படைக்கப்பட்டவை.
<u>காரணம்</u>: (கா) இந்நாடகங்கள் அரங்கம், ஒப்பனை, விளக்கு, ஒலியமைப்பு போன்றவை சிறப்பிடம் பெறுவன.
(A) (உ), சரி (கா) சரியன்று (B) (உ), சரியன்று (கா) சரி
(C) இரண்டும் சரியல்ல (D) இரண்டும் சரி

36. <u>உறுதிக்கூற்று</u>: (உ) கோவை இலக்கியம் அகப்பொருட்கோவை, ஐந்திணைக் கோவை என்றெல்லாம் வழங்கப்படும்
<u>காரணம்</u>: (கா) கோவை இலக்கியங்கள் காமவின்பம் ஊட்டும் கைக்கிளை, பெருந்திணைப் பாடல்களின் தொகுதியாகும்
(A) (உ), சரியன்று (கா) சரி (B) (உ), சரி (கா) சரியன்று
(C) இரண்டும் சரி (D) இரண்டும் சரியல்ல

37. <u>உறுதிக்கூற்று</u>: (உ) காப்பியப் பகுப்புக்களுள் ஐம்பெருங் காப்பியங்கள் என்பதும் ஒன்று.
<u>காரணம்</u>: (கா) அக்காப்பியங்கள் அளவால் பெரியன
(A) (உ), (கா) இரண்டும் சரி (B) இரண்டும் சரியல்ல
(C) (உ) சரியன்று ; (கா) சரி (D) (உ) சரி (கா) சரியன்று

38. <u>உறுதிக்கூற்று</u>: (உ) சித்தர்களுள் இடைக்காட்டுச்சித்தர் என்று ஒருவருக்குப் பெயர்
<u>காரணம்</u>: (கா) காட்டினிடையே நின்றுகொண்டு பாடியவர் அவர்.
(A) (உ) சரியன்று (கா) சரி (B) இரண்டும் சரியல்ல
(C) (உ) சரி (கா) சரியன்று (D) இரண்டும் சரி

39. <u>உறுதிக்கூற்று</u>: (உ) வீரமாமுனிவர் தமது அகராதிக்குச் சதுரகராதி எனப் பெயரிட்டார்.
<u>காரணம்</u>: (கா) சதுரப் பாட்டுடன் தொகுக்கப்பெற்ற அகராதி அது
(A) (உ) சரியன்று (கா) சரி (B) (உ) சரி ; (கா) சரியன்று
(C) இரண்டும் சரி (D) இரண்டும் சரியல்ல

40. <u>உறுதிக்கூற்று</u>: (உ) தாயுமானவர் சமய சமரச நெறியை வளர்த்தவர்
<u>காரணம்</u>:(கா) எல்லா மதங்களும் ஒரே குறிக்கோள் உடையவை என்பது அவரது கொள்கை.
(A) (உ) சரி ; (கா) சரியன்று (B) இரண்டும் சரி
(C) (உ) சரியன்று : (கா) சரி (D) இரண்டும் சரியல்ல

41. <u>நிரல்படுத்துக</u>.
உள்ளுறை வகைகள்
(A) உடனுறை, உவமம், சுட்டு, நகை, சிறப்பு
(B) உடனுறை, சுட்டு, உவமம், நகை, சிறப்பு
(C) உடனுறை, நகை, சுட்டு, உவமம், சிறப்பு
(D) உடனுறை, சிறப்பு, சுட்டு, உவமம், நகை

42. <u>நிரல்படுத்துக.</u>
தோழி சிறப்பித்துக் கூறல்
(A) சினன், நல்குரவு, பேதைமை, நிம்பிரி
(B) சினன்,நிம்பிரி,நல்குரவு,பேதைமை
(C) சினன், பேதைமை,நல்குரவு,நிம்பிரி
(D) சினன், பேதைமை, நிம்பரி,நல்குரவு

43. <u>நிரல்படுத்துக.</u>
வெகுளிக்கான நிலைக்களன்கள்
(A) உறுப்பறை,அலை,கொலை,குடிகோள்
(B) உறுப்பறை, குடிகோள், கொலை, அலை
(C) உறுப்பறை, குடிகோள், அலை, கொலை
(D) உறுப்பறை, கொலை, குடிகோள், அலை

44. <u>நிரல்படுத்துக.</u>
தொடை வகை
(A) மோனை, இயைபு, முரண், எதுகை
(B) மோனை, எதுகை,முரண்,இயைபு
(C) மோனை, முரண், எதுகை,இயைபு
(D) மோனை, இயைபு, முரண், எதுகை

45. <u>நிரல்படுத்துக.</u>
கலிப்பா வகை
(A) ஒத்தாழிசை,கொச்சகம், கலிவெண்பாட்டு,உறழ்கலி
(B) ஒத்தாழிசை,கொச்சகம், உறழ்கலி,கலிவெண்பாட்டு
(C) ஒத்தாழிசை, உறழ்கலி, கொச்சகம், கலிவெண்பாட்டு
(D) ஒத்தாழிசை, கலிவெண்பாட்டு,கொச்சகம், உறழ்கலி

46. <u>நிரல்படுத்துக.</u>
ஆண்யாடு
(A) மோத்தை, அப்பர், உதள், தகர்
(B) மோத்தை, தகர், உதள், அப்பர்
(C) மோத்தை, தகர், அப்பர், உதள்
(D) மோத்தை, உதள், தகர், அப்பர்

47. <u>நிரல்படுத்துக.</u>
வழிநூல் வகை
(A) தொகுத்தல்,விரித்தல், தொகைவிரி,மொழிபெயர்த்தல்
(B) தொகுத்தல், தொகைவிரி,விரித்தல்,மொழிபெயர்த்தல்
(C) தொகுத்தல், விரித்தல்,மொழிபெயர்த்தல்,தொகைவிரி
(D) தொகுத்தல், தொகைவிரி,மொழிபெயர்த்தல்,விரித்தல்

**48.** <u>நிரல்படுத்துக.</u>
பிணைகள்
(A) புல்வாய், கவரி, நவ்வி,உழை
(B) புல்வாய், கவரி, உழை, நவ்வி
(C) புல்வாய், நவ்வி, உழை, கவரி
(D) புல்வாய், உழை, நவ்வி, கவரி

**49.** <u>நிரல்படுத்துக.</u>
மதனின் பஞ்சபாணம் தைக்கும் இடங்கள்
(A) உச்சி, நெஞ்சு, நெற்றி, முலை, குய்யம்
(B) உச்சி, நெற்றி, நெஞ்சு,முலை, குய்யம்
(C) உச்சி,முலை,நெஞ்சு,நெற்றி,குய்யம்
(D) உச்சி,குய்யம்,நெற்றி,நெஞ்சு,முலை

**50.** <u>நிரல்படுத்துக.</u>
சதுரகராதிகள்
(A) பெயர்,பொருள்,தொகை,தொடை
(B) பெயர்,தொகை,.தொடை,பொருள்
(C) பெயர்,தொடை,பொருள்,தொகை
(D) பெயர்,பொருள்,தொடை,தொகை

**51.** <u>நிரல்படுத்துக.</u>
புலைமையோர்
(A) கவி,வாக்கி,கமகன்,வாதி
(B) கவி,வாக்கி,வாதி,கமகன்
(C) கவி,கமகன்,வாதி,வாக்கி
(D) கவி,வாதி,கமகன்,வாக்கி

**52.** <u>நிரல்படுத்துக.</u>
குற்றியலுகர வகை
(A) உயிர்த்தொடர்,இடைத்தொடர்,ஆய்தத்தொடர்,வன்றொடர்
(B) உயிர்த்தொடர்,ஆய்தத்தொடர்,இடைத்தொடர்,வன்றொடர்
(C) உயிர்த்தொடர்,வன்றொடர், இடைத்தொடர்,ஆய்தத்தொடர்
(D) உயிர்த்தொடர்,ஆய்தத்தொடர்,இடைத்தொடர்,வன்றொடர்

**53.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | ஆசிரியப்பா | (1) | 25-400 அடிகள் |
| (b) | வெண்பா | (2) | 4-12 அடிகள் |
| (c) | பரிபாடல் | (3) | 3-1000 அடிகள் |
| (d) | தரவு | (4) | 2-12 அடிகள் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (3) | (4) | (1) | (2) |
| (B) | (3) | (1) | (4) | (2) |
| (C) | (3) | (2) | (4) | (1) |
| (D) | (3) | (1) | (2) | (4) |

54. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | நகை | (1) | மென்மை |
| (b) | அழுகை | (2) | சிறுமை |
| (c) | இளிவரல் | (3) | அசைவு |
| (d) | மருட்கை | (4) | மடன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (4) | (3) | (2) | (1) |
| (B) | (4) | (2) | (1) | (3) |
| (C) | (4) | (2) | (3) | (1) |
| (D) | (4) | (3) | (1) | (2) |

55. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | துயவு | (1) | வறுமை |
| (b) | நுழைவு | (2) | அறிவுத்திரிபு |
| (c) | இலம்பாடு | (3) | செறிவு |
| (d) | விறப்பு | (4) | நுண்மை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (2) | (4) | (1) | (3) |
| (B) | (2) | (1) | (4) | (3) |
| (C) | (2) | (3) | (1) | (4) |
| (D) | (2) | (1) | (3) | (4) |

56. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | காதணி | (1) | சூடகம் |
| (b) | அரையணி | (2) | பாடகம் |
| (c) | கால்விரலணி | (3) | கடிப்பிணை |
| (d) | தோளணி | (4) | விரிசிகை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (3) | (4) | (1) | (2) |
| (B) | (3) | (1) | (4) | (2) |
| (C) | (3) | (4) | (2) | (1) |
| (D) | (3) | (2) | (4) | (1) |

57. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | இடையெழுத்து மிக்குவரல் | (1) | நலிபுவண்ணம் |
| (b) | ஆய்தம் பயிலல் | (2) | அகைப்புவண்ணம் |
| (c) | நெடியவும் குறியவும் சேர்ந்து வரல் | (3) | இயைபுவண்ணம் |
| (d) | அறுத்தறுத்து ஒழுகுதல் | (4) | சித்திர வண்ணம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (3) | (1) | (4) | (2) |
| (B) | (3) | (1) | (2) | (4) |
| (C) | (3) | (4) | (2) | (1) |
| (D) | (3) | (4) | (1) | (2) |

58. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | சமூகவியல் திறனாய்வு | (1) | ஆ.முத்துசிவன் |
| (b) | விளக்கவியல் திறனாய்வு | (2) | கைலாசபதி |
| (c) | ஒப்பியல் திறனாய்வு | (3) | தமிழவன் |
| (d) | அமைப்பியல் திறனாய்வு | (4) | கா.செல்லப்பன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (2) | (4) | (3) | (1) |
| (B) | (2) | (1) | (4) | (3) |
| (C) | (2) | (1) | (3) | (4) |
| (D) | (2) | (3) | (4) | (1) |

59. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | புவியரசு | (1) | அன்றுவேறு கிழமை |
| (b) | ஞானக்கூத்தன் | (2) | ஊர்வலம் |
| (c) | மேத்தா | (3) | ஒளிப்பறவை |
| (d) | சிற்பி | (4) | இதுதான் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (4) | (2) | (3) | (1) |
| (B) | (4) | (3) | (2) | (1) |
| (C) | (4) | (1) | (2) | (3) |
| (D) | (4) | (1) | (3) | (2) |

60. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | மார்க்கோபோலோ | (1) | சீனப் பயணி |
| (b) | சா-ஜீ-குவா | (2) | கிரேக்கப் பயணி |
| (c) | இபன் பதுதா | (3) | வெனிஸ் பயணி |
| (d) | தாலமி | (4) | முஸ்லீம் பயணி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (3) | (1) | (4) | (2) |
| (B) | (3) | (1) | (2) | (4) |
| (C) | (3) | (2) | (4) | (1) |
| (D) | (3) | (4) | (1) | (2) |

61. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | மங்கலமொழி | (1) | தலைவனைத் தலைவியோ தலைவியைத் தலைவனோ புகழ்ந்து கூறும் கிளவி |
| (b) | உயர்மொழி | (2) | அகப்பெண் மாந்தர்களுக்கு உரிய அன்பு பொருந்தக் கூறும் ஒருபால் கிளவி |
| (c) | பால்கெழமொழி | (3) | செயலற்ற சொற்களைக் கூறும் கிளவி |
| (d) | கையறு மொழி | (4) | தலைவனை வாழ்த்தும் கிளவி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (4) | (1) | (3) | (2) |
| (B) | (4) | (1) | (2) | (3) |
| (C) | (4) | (3) | (2) | (1) |
| (D) | (4) | (2) | (3) | (1) |

**62.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | பெண்மரை | (1) | மூடு |
| (b) | பெண் ஆடு | (2) | ஆ |
| (c) | பெண் நாய் | (3) | பிணா |
| (d) | மனிதப் பெண் | (4) | பாட்டி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (2) | (3) | (4) | (1) |
| (B) | (2) | (4) | (3) | (1) |
| (C) | (2) | (3) | (4) | (2) |
| (D) | (2) | (1) | (4) | (3) |

**63.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | சகோடயாழ் | (1) | 7 நரம்புகள் |
| (b) | செங்கோட்டுயாழ் | (2) | 19 நரம்புகள் |
| (c) | பேரியாழ் | (3) | 14 நரம்புகள் |
| (d) | மகரயாழ் | (4) | 21 நரம்புகள் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (3) | (2) | (4) | (1) |
| (B) | (3) | (4) | (2) | (1) |
| (C) | (3) | (1) | (4) | (2) |
| (D) | (3) | (1) | (2) | (4) |

**64.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | செண்டு | (1) | கதவுகளை மூடிக் குறுக்கே இட்டுப் பூட்டும் மரம் |
| (b) | நுகம் | (2) | வீட்டு வாசலை ஒட்டிய மேடை |
| (c) | வேதிகை | (3) | நிலாமுற்றத்தின் மேல் விழும் மழை நீரைக் கீழே கொணரும் தூம்பு |
| (d) | அம்பணம் | (4) | அரண்மனையைச் சுற்றியிருக்கும் வெற்று வெளி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (4) | (2) | (3) | (1) |
| (B) | (4) | (1) | (2) | (3) |
| (C) | (4) | (1) | (3) | (2) |
| (D) | (4) | (3) | (2) | (1) |

**65.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | நச்சினார்க்கினியர் | (1) | குறுந்தொகை |
| (b) | அடியார்க்கு நல்லார் | (2) | பரிபாடல் |
| (c) | பரிமேலழகர் | (3) | சீவகசிந்தாமணி |
| (d) | ஔவை துரைசாமிப் பிள்ளை | (4) | சிலப்பதிகாரம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (3) | (4) | (1) | (2) |
| (B) | (3) | (2) | (4) | (1) |
| (C) | (3) | (1) | (4) | (2) |
| (D) | (3) | (4) | (2) | (1) |

**66.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | திறனாய்வியல் | (1) | சு.சக்திவேல் |
| (b) | ஒப்பியல் | (2) | வ.சுப.மாணிக்கம் |
| (c) | நாட்டுப்புறவியல் | (3) | கைலாசபதி |
| (d) | காப்பிய நெறி | (4) | தா.ஏ.ஞான மூர்த்தி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (4) | (3) | (1) | (2) |
| (B) | (4) | (1) | (2) | (3) |
| (C) | (4) | (2) | (3) | (1) |
| (D) | (4) | (3) | (2) | (1) |

**67.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | ராஜம் கிருஷ்ணன் | (1) | காஞ்சனையின் கனவு |
| (b) | லஷ்மி | (2) | குறிஞ்சித்தேன் |
| (c) | திலகவதி | (3) | 47 நாட்கள் |
| (d) | சிவசங்கரி | (4) | கல்மரம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (2) | (1) | (3) | (4) |
| (B) | (2) | (3) | (4) | (1) |
| (C) | (2) | (1) | (4) | (3) |
| (D) | (2) | (4) | (3) | (1) |

(68 – **75**) பின்வரும் பகுதியைப் படித்துப் பார்த்துத் தொடர்ந்து இடம் பெற்றுள்ள வினாக்களுக்கு ஏற்ற விடையைச் சுட்டுக.

காப்பதற்கும், அடக்குதற்கும் அரிதான சபல சித்தத்தை அறிவாளி வேடன் தன் அம்பை நிமிர்த்துவது போல நோக்குகிறான். தண்ணீரிலிருந்து வெளியே தரையில் எடுத்தெறியப்பட்ட மீன் துடிப்பது போல மாரனின் பிடியிலிருந்து தப்புவதற்காக நமது சித்தம் துடிக்கின்றது. அடக்குவதற்கு அறிதாயும், துடிப்புள்ளதாயும் தன் போக்குப்படி திரிவதாயுமுள்ள சித்தத்தை அடக்குதல் நல்லது; அடக்கியாளப்பெற்ற சித்தம் சுகமளிக்கும். அறிவதற்கு அரிதாயும், மிக நுணுக்கமானதாயும், தன் போக்குப்படி திரிவதாயுமுள்ள சித்தத்தை அறிஞன் காத்து வர வேண்டும். காக்கப்பெற்ற சித்தம் சுகமளிக்கும். நெடுந்தூரம் தனியே சஞ்சரிப்பதாயும் உருவமற்றதாயும் இதயக்குகையுள் அமர்ந்துள்ள சித்தத்தை அடக்கியாள்பவர் மாரன் பிடியிலிருந்து விடுபட்டவராவர். நிலையில்லாத சித்தத்தையுடையவரும், உண்மையான தருமத்தை அறியாதவரும், மனத்தின் சாந்தி குழம்பியவரும் பூரண ஞானத்தைப் பெற முடியாது.

எவனுடைய சிந்தை கலக்கமடையாமல் இருக்கிறதோ, எவனுடைய சிந்தை குழப்பமுற்றுள்ளதோ, எவன் புண்ணியம், பாவம் (இரண்டையும்) பற்றிச் சிந்திப்பதில்லையோ, எவன் விழிப்புடன் உள்ளானோ அவனுக்கு அச்சமில்லை. உடல் மட்கலம் போல் உடைவதாக உள்ளதை அறிந்து ஒருவன் தன் சித்தத்தைக் கோட்டைபோல் அரண் செய்து, அறிவு என்னும் ஆயுதத்தால் மாரனை எதிர்த்துத் தாக்க வெண்டும் ; வென்ற பின்னும் அவனிடம் கவனமாயிருந்து வென்றதைக் காக்க வேண்டும். அந்தோ, வெகு சீக்கிரத்தில், எரிந்து பயனற்றுப்போன சுள்ளிபோல் இந்த உடல் உணர்ச்சியற்று, வெறுக்கப்பட்டுத் தரைமீது கிடக்கும் !. பகைவனுக்குச் செய்யும் தீமையைப் பார்க்கினும், நிந்திப்பவன் எதிரிக்குச் செய்யும் தீமையைப் பார்க்கினும், தவறான வழியில் திரும்பிய சித்தம் அதிகக் கேடு விளைவிக்கும். தாயும், தந்தையும், சுற்றத்தாரும் நமக்குச் செய்யும் உதவியைப் பார்க்கினும் நல்ல வழியில் திரும்பிய சித்தம் அதிக உதவியளிக்கும்.

**68.** மாரனைத் தாக்கவேண்டிய கருவி

(A) அறம் (B) அறிவு

(C) அடக்கம் (D) வீரம்

**69.** பூரண ஞானம் பெறமுடியாதவர்கள்

(I) மெய்யான தருமத்தை அறியாதவர்கள்

(II) நிலையான சித்தம் உடையவர்கள்

(III) சித்தத்தை அடக்க இயலாதவர்கள்

(IV) உள்ளத்தில் அமைதி குலைந்தவர்கள்

இவற்றுள்

(A) I, III, IV சரி (B) I, II, III சரி

(C) II, III, IV சரி (D) I, II, IV சரி

**70.** <u>உறுதிக்கூற்று</u>: (உ) உடல் மட்கலம் போல உடைவது.
<u>காரணம்</u>: (கா)சித்தத்தை கோட்டை போல அரண் செய்ய வேண்டும்

(A) (உ) (கா) இரண்டும் சரி

(B) (உ) சரியன்று, (கா) சரி

(C) (உ) சரி, (கா) சரியன்று

(D) (உ) (கா) இரண்டும் சரியல்ல

**71.** <u>நிரல்படுத்துக</u>.

(A) சிந்தை கலங்காமை, குழம்பாமை,பாவபுண்ணியங்களைச் சிந்தியாமை, விழிப்புடன் உள்ளமை

(B) சிந்தை கலங்காமை,பாவபுண்ணியங்களைச் சிந்தியாமை, குழம்பாமை, விழிப்புடன் உள்ளமை

(C) சிந்தை கலங்காமை, விழிப்புடன் உள்ளமை, குழம்பாமை, பாவபுண்ணியங்களைச் சிந்தியாமை

(D) சிந்தை கலங்காமை, குழம்பாமை, விழிப்புடன் உள்ளமை, பாவபுண்ணியங்களைச் சிந்தியாமை

**72.** பொருத்துக:

(a) தரையில் எறிந்த மீன் (1) அறிவாளி
(b) எரிந்த சுள்ளி (2) ஆசை
(c) மாரன் பிடி (3) சித்தம்
(d) வேடன் (4) உடல்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (3) | (2) | (1) | (4) |
| (B) | (3) | (2) | (4) | (1) |
| (C) | (3) | (4) | (1) | (2) |
| (D) | (3) | (4) | (2) | (1) |

**73.** உறுதிக்கூற்று: (உ) மனிதன் பூரண ஞானத்தைப் பெற முடியும்.
காரணம்: (கா)அவன் மெய்யான அறம், உளஅமைதி கொண்டவனாக இருக்க வேண்டும்

(A) (உ) , (கா) இரண்டும் சரி
(B) (உ) , சரி (கா) சரியன்று
(C) (உ) , (கா) இரண்டும் சரியல்ல
(D) (உ) சரியன்று (கா) சரி

**74**. அதிகக் கேடு விளைவிப்பது

(I) உடல் உணர்ச்சியற்ற நிலை
(II) பகைவனுக்குச் செய்யும் தீமை
(III) தவறானவழி சித்தம் செல்லுதல்
(IV) மனச்சாந்தி அடைதல்

இவற்றுள்

(A) I, III, IV சரி
(B) I, II, III சரி
(C) I, II, IV சரி
(D) அனைத்தும் சரி

**75.** பொருத்துக:

(a) விழிப்புடைமை (1) மட்கலம்
(b) உடல் (2) கோட்டை
(c) சித்தம் (3) மாரன்
(d) ஆசை (4) அச்சமின்மை

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (3) | (4) | (1) | (2) |
| (B) | (4) | (2) | (3) | (1) |
| (C) | (4) | (1) | (2) | (3) |
| (D) | (2) | (3) | (4) | (1) |

**Space For Rough Work**